செய்தி வெளியீடு எண்: 469 நாள்: 23.09.2016

# செய்தி வெளியீடு

# தொழில் நுட்பக் கல்வித் துறை

**வாரிய பட்டயத் தேர்வுகள் அக்டோபர் 2016 பழைய மாணவர்களுக்கு கருணை அடிப்படையில் மீண்டும் தேர்வு எழுத வாய்ப்பு வழங்குதல் தொடர்பாக.**

தொழில் நுட்பக் கல்வித் துறையின் கீழ் நடத்தப்படவிருக்கும் **அக்டோபர் 2016** மற்றும் **ஏப்ரல் 2017** பட்டய தேர்வுகளின் போது கீழ் கண்ட பாடத்திட்டங்களில் முன்னாள் பழைய மாணவர்களுக்கும் கருணை அடிப்படையில் தேர்வு எழுத வாய்ப்பு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது

2009ம் ஆண்டிற்கு முன் (2008 வரை) மூன்று வருட பட்டயப்படிப்பில் சேர்ந்த அனைவரும் மற்றும் 2008ம் ஆண்டிற்கு முன் (2007 வரை) நான்கு வருட பகுதி நேர பட்டயப்படிப்பில் சேர்ந்த அனைவரும்

**OR, NR, RR, RS, C, D, G, J** மற்றும் **K** பாடத்திட்டங்கள்

இத்திட்டத்தின்படி தேர்வு எழுத விரும்பும் மாணவர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் ரூபாய். 500 /– தேர்வு கட்டணமாகவும், ரூபாய். 30 /– மதிப்பெண் பட்டியல் கட்டணமாகவும், ரூபாய். 25/– பதிவுக்கட்டணமாகவும் தாங்கள் பயின்ற கல்லூரி முதல்வர் மூலமாக கீழ் கண்ட அட்டவணையின் படி செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும்

| | |
|---|---|
| அபராதம் இன்றி செலுத்த கடைசி நாள் | **30-9-2016** |
| ரூபாய். 100 /– அபராதத்துடன் செலுத்த கடைசி நாள் | **07-10-2016** |
| தட்கல் முறை (ரூபாய். 500 /– அபராதம்) கடைசி நாள் | **14-10-2016** |

மாணவர்கள் இந்த வாய்ப்பினை தவறாது பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இயக்குநர்**
**தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்**

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**